**செய்தி வெளியீடு எண்:1167** **நாள்:22.11.2021**

# செய்தி வெளியீடு

## வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போது அடையாளம் தெரியாத வாகனம் மோதிய விபத்தில் உயிரிழந்த கரூர் வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர், திரு.நா.கனகராஜ் அவர்களின் குடும்பத்தாருக்கு இரங்கல் மற்றும் ரூபாய் ஐம்பது இலட்சம் நிதியுதவி – மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

கரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரியும் திரு.நா.கனகராஜ், அவர்கள் இன்று 22-11-2021 காலை கரூர்-திருச்சி நான்கு வழிச்சாலையில் வாகன தணிக்கை பணியிலிருந்தபோது எதிர்பாராத வகையில் அடையாளம் தெரியாத வாகனம் மோதிய விபத்தில் உயிரிழந்துள்ளார்.

திரு.நா.கனகராஜ், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள், பணியிலிருக்கும்போது அடையாளம் தெரியாத வாகனம் மோதி உயிரிழந்தார் என்ற துயரச் செய்தியினைக் கேள்வியுற்று மிகுந்த வருத்தமடைந்தேன்.இச்சம்பவத்தில் உயிரிழந்த திரு.நா.கனகராஜ், அவர்களின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும்,வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவரதுகுடும்பத்தாருக்கு அரசு சார்பாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஐம்பது இலட்சம் நிதியுதவி வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**